தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2039, பங்குனி 27

2008 ஏப்ரல் 9, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்."

எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதி உடையவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணியவாறே வெற்றி பெறுவார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

71—

பேருந்து நிலையம்

***29719—திரு. கோ. அரி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி நகராட்சிக்குள் இருக்கும் பேருந்து நிலையத்தை, நெரிசலைத் தவிர்க்கும்பொருட்டு நகர எல்லைக்கு வெளியே மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2008 ஏப்ரல் 9

திருத்தணி நகராட்சிப் பேருந்து நிலையத்தை, நெரிசலைத் தவிர்க்கும்பொருட்டு நகர எல்லைக்கு வெளியே மாற்றும் திட்டம் ஏதும் தற்போது அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

திரு. கோ. அரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி நகரில் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்பவும், திருத்தணி, அறுபடை வீடுகளில் மிக முக்கியமான படைவீடாகவும் உள்ளதாலும், வெளியூர்களிலிருந்து இலட்சக்கணக்கிலே மக்கள் வந்து செல்வதாலும், புகழ்பெற்ற திருப்பதிக்குச் செல்கின்ற பயணிகளும் திருத்தணி வழியாகத்தான் வந்து செல்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், திருத்தணி நகரில் தனியார் வாகனங்கள் மற்றும் அரசுப் பேருந்துகள் உள்ளே சென்று வர முடியாத ஒரு சூழ்நிலை உள்ளது. இந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, திருத்தணி நகருக்கு வெளியே சுமார் 100 ஏக்கருக்கும் மேல் பரப்பளவுகொண்ட ஏரி, தற்போது பயனற்றுக் கிடக்கிறது. அந்த ஏரியில் எப்போதாவது தண்ணீர் வரும் என்றாலும்கூட, அதை நம்பியிருந்த விளை நிலங்கள், இன்றைக்கு வீட்டுமனைப் பட்டாக்களாக உருவெடுத்துள்ள சூழ்நிலையில், அது பயனற்றுக் கிடக்கிறது. அப்படி இருக்கின்ற சூழ்நிலையில் போதுமான நிலத்தை, அரசு கையகப்படுத்தி, திருத்தணி நகருக்கு வெளியே ஒரு பேருந்து நிலையத்தையும், தற்போது இருக்கின்ற பேருந்து நிலையத்தை உள்ளூர் பேருந்து நிலையமாகவும் மாற்றித் தந்தால், திருத்தணி நகர மக்கள் பெரிதும் பயனடைவார்கள். அதை அமைச்சர் அவர்கள் செய்வாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர எல்லைக்குள் புதிய பேருந்து நிலையம் அமைக்க நகராட்சிக்குச் சொந்தமான இடம் இல்லாததால், புதிய பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் இப்போது இல்லாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு ஏரியைக் குறிப்பிட்டுச் சொல்லி, அந்த இடத்திலே உருவாக்கலாம், அங்கு அமைக்கலாம் என்ற ஒரு கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே, கடந்த காலங்களில் ஏரிகளில்

2008 ஏப்ரல் 9]

அமைக்கக்கூடிய பேருந்து நிலையங்களைப் பொறுத்தவரையில், அவ்வப்போது நீதிமன்றத்திற்குச் சென்று சிலர் தடை உத்தரவைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, நீதிமன்றமும் பொதுவான ஒரு முடிவை வழங்கியிருக்கிறது. ஆக, இந்தச் சூழ்நிலையில்தான், அங்கே பேருந்து நிலையம் கட்ட முடியாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும், இந்தப் பேருந்து நிலைய வளாகத்திலேயே 1953 ஆம் ஆண்டு முதல் 2,800 சதுர மீட்டர் பரப்பளவிலே ஒரு நகராட்சியினுடைய அலுவலகக் கட்டடம், செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய நகராட்சியும் ஒரு தீர்மானம் போட்டிருக்கிறது. அதாவது, பழைய நகராட்சி அலுவலகக் கட்டடத்தை இடித்து விட்டு, புதிய அலுவலகக் கட்டடத்தை திருத்தணி - அரக்கோணம் சாலையில் கட்ட ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு சூழ்நிலை உருவாகிறபோது, அலுவலகக் கட்டடம் புதியதாகக் கட்டி மாற்றம் செய்யப்படக்கூடிய சூழ்நிலையில், நிச்சயமாக அந்தப் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்ய வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

திரு. கோ. அரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற அந்தப் பேருந்து நிலையம் ஒரு ஏக்கர் பரப்பளவில் சுமார் 55 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து கொண்டிருக்கிறது. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சொல்லப்பட்டிருக்கின்ற, கட்டடம் இடிக்கப்படுகின்ற அந்த இடத்தில், சுமார் இரண்டு Ground நிலம்கூட இல்லை. அதை விரிவுபடுத்தினால், சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட அதே நிலையில்தான், அதே பேருந்து நிலையமாகத்தான் காட்சியளிக்கும். இதுகுறித்து ஏற்கெனவே 2001-2006-ல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், திருத்தணி பேரூராட்சியிலே, தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. போதுமான அளவு இட வசதி இல்லாததால், திருத்தணி நகருக்குள் இருக்கின்ற அந்தப் பேருந்து நிலையத்தை மாற்றலாம் என்று ஏற்கெனவே ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். ஆக, அம்மா ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் திருத்தணி நகர மக்களுக்கு உதவியாக இருக்க, வெளியூர் பேருந்து நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமாய் தங்கள்மூலமாய் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

[2008 ஏப்ரல் 9

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்தின் அடிப்படையில் அரசு நிச்சயமாகப் பரிசீலித்து ஒரு நல்ல முடிவை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் பெரியசாமி.

திரு. அன்பில் பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாநகராட்சியில் போக்குவரத்து நெரிசலைத் தடுக்க புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விளக்கமாக பதில் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

72—

கரும்பு

***21961—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டத்தில் கரும்புப் பயிரில் செவ்வழுகல் நோயைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,